REGD No. M. 4642

திராவிடநாடு

இலங்கை 15 சதம் | விலை அணா 2

மலர் 9 | 18—2—51 | இதழ் 35

★ துடைத்துக் கொள்க! ★

சி. என். ஏ.

"இதுகளுக்கு" ஆங்கிலமோகம் அமோகம்!

ஆங்கிலம், வெளிநாட்டான் மொழி. அந்த ஆங்கிலத்துக்கு "இதுகள்" அடிமைகள்!!

"இதுகளா", கன்னித்தமிழைக் காப்பாற்றப் போகின்றன! காங்கிரசாராகிய நாங்கள் இந்த ஆங்கில மோகம் கொண்ட அடிமைகளல்ல!

ஆங்கிலத்தை அடியோடு விரட்டி அடிப்போம்.

'இதுகள்' வெட்கமின்றிக் கூறுகின்றன, ஆங்கிலம் இருக்கத்தான் வேண்டுமென்று, என்னே, 'இதுகளின்', அடிமை மனப்பான்மை.

தமிழ் வளர்க்கும் பண்பா இது! இதுகளா தமிழை வளர்க்கும் கூட்டம்!

ஐயகோ! ஐயகோ! அம்மவோ! அம்மவோ!—

இதுபோல, முழக்கமிடும் தேசியத்தமிழர் சிலர் உண்டு—அறிந்திருப்பீர்கள்.

உலகிலே ஆங்கிலம் அடைந்துள்ள உயர் நிலையைக்கண்டு, அந்தமொழி மூலம் பெறக்கூடிய பலன்களை எண்ணி, ஆங்கிலத்தைப் புறக்கணிக்கக் கூடாது என்று நாம் கூறுவது கேட்டு, 'இதுகள் அடிமைகள்' என்று வசை பாடுகின்றனர்.

"சர்வதேச பாஷையான ஆங்கிலப் படிப்பை இந்தியா விட்டுவிட முடியாது. ஆரம்பத்திலிருந்தே ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஆங்கிலம் கட்டாய பாஷையாக்கப்பட வேண்டும்"

கேண்மினோ! கேண்மினோ! கேடு களைந்து, கன்னித்தமிழை வளர்க்கக்கங்கணம் கட்டிக்கொண்டுள்ள கர்மவீரர்காள்! நீவிர் நிமிர்ந்து நடந்துகொண்டிருக்கும் இந்நாளிலே நாடே உமது ஆள்காட்டி விரல் கண்டு ஆடிடும் இவ்வேளையிலே ஆங்கிலம் இருக்கத்தான் வேண்டும், கட்டாய பாஷையாகவும் போதிக்கப்பட வேண்டும். அதிலேயும், ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் போதிக்கப்பட வேண்டும், ஆரம்பத்திலிருந்தே கட்டாயபாஷையாகப் போதிக்கப்பட வேண்டும் என்று துணிவுடன் கூறுவதைக் கேண்மின்! எவ்வளவு நெஞ்சழுத்தம்! எத்துணை அடிமைப் புத்தி! எங்ஙனம் இதனை விட்டுவைப்பது! எடுங்கள் ஏசல் பாணத்தை! தொடுத்திடுங்கள் போர்! தமிழ் வளர்க்கும் வீரர்காள்! ஆங்கில மோகம் கொண்டலைவோரை வீழ்த்தாது விடுவது அழகாமோ, அறமாமோ, தமிழைப் போற்றுதும்! தமிழைப் போற்றுதும்! — என்று பாடிக்கூடுக! பாவியைத் தொலைத்திட முன்வருக! இன்றே வருக! திரண்டு வருக!"—என்று கூறிடத் தோன்றும், நம்மை 'இதுகள்'என்று ஏசிடும் தலைவர் வழி நிற்கும்தொண்டர் குழாத்துக்கு.

உண்மையாகவே, ஆங்கில மொழியின் பயனைக் கருதி அம்மொழியைப் பயில வேண்டும் என்று கூறிடும் நம்மை, 'அதுகள்—இதுகள்' என்று ஆத்திரத்துடன் ஏசிடுவோர், ஆங்கில மொழியைப் படித்தாக வேண்டும், அனைவரும், கட்டாயமாக, துவக்கத்திலிருந்தே என்று பேசிடுவோரைச் சாடாது விடலாமோ! அந்த அடிமைப் புத்தியை மண்டையிலடித்து நொறுக்காவிட்டால், தேசிய வீரம் என்னாவது! கன்னித் தமிழைக் காப்பாற்றும் கர்மவீரர்களின் தீரம், திறம், என்னாவது! எனவே அவர்கள், ஏசத்தான் வேண்டும், ஆங்கில மோகத்தை அழிக்க, பிறமொழிப் பித்தத்தைப் போக்க, அன்னியனின் அடிவருடும் பேதைமையை ஒழிக்க!

ஏசத்தான் வேண்டும்—நம்மை 'இதுகள் அதுகள்' எனக் கூறிடுவதைவிட, வன்மையாகக் கண்டிக்கத்தான் வேண்டும்—ஏசத்தான் வேண்டும்—கண்டிக்கத்தான் வேண்டும்—ஆனால், ஏசவும் மாட்டார்கள், கண்டிக்கவும் மாட்டார்கள்—ஏனெனில், ஆங்கிலத்தை ஆரம்ப

(5-ம் பக்கம் பார்க்க)

எச்சரிக்கை!

இருட்டியதும் எழுந்தான்—மக்கள் தூங்கும் நேரத்தில், அவன் மிக விழிப்புடன் நடந்தான்.

ஏன்? எங்கு?—அது அவனுக்கே தெரியாது.

நடந்தான், நடந்தான் — நடந்து கொண்டே இருந்தான்.

ஒரு வீட்டைப் பார்த்தான் — தோட்டத்து மதில் தாழ்வாக இருந்தது—உடனே நின்றான் — ஏறிக் குதித்தான் — உள்ளே மறைந்து விட்டான்.

சிறிது நேரத்தில் அந்த வீட்டிலிருந்து கூச்சல் — 'திருடன், திருடன்' என்ற கூக்குரல்!

என்ன திருடினான்? என்ன திருடினான்?—அக்கம் பக்கத்திலுள்ளோர் கூச்சல்கேட்டு ஓடிவந்து கேட்டனர்.

பழையசோறு!

பருப்புக்குழம்பு!

அவன் திருடியவை — அவனைக் கட்டி வைத்தனர் — அடித்தனர்!

"பசியைத் தாங்கமுடியவில்லை — என்ன செய்யட்டும்? நீங்கள் உண்டதுபோக மிச்சந்தானே அவை — எடுத்தேன் புசித்தேன்! ஏன் என்னை அடிக்கிறீர்கள்!" என்றான் அவன், அழுகுரலில்!

"திருட்டுப் பயலுக்கு வாயைப் பாருடா, வாயை!" என்று அடித்தனர், உதைத்தனர், உதைத்தனர் மீண்டும்!

X X X

கும்பகோணத்திலே, இம்மாதிரி ஒருவன் பழைய சோற்றைத் திருடிவிட்டு, சிறைக்குள் தள்ளப்பட்டதாகச் செய்தி வந்துள்ளது.

பசி, திருடனாக்கிவிட்டது! பயங்கரமான சேதி இது—இதைக் கேட்கவே நெஞ்சு நடுங்குகிறது.

இதுவரை வந்த செய்திகளுக்கும் இதற்கும் பெரிய வித்தியாசம — விபரீதமானவேற்றுமை— மலைக்கும், மடுவுக்கு முள்ளதைவிட அதிகம்!

மனித மனம் ஒரு விசித்திரமான எரிமலை—தீயைத் திடீரெனக் கொட்டாது. முதலில் குமுறிக் குமுறி அடங்கிவிடும். ஆனால் தீக்குழம்பை வீச ஆரம்பித்துவிட்டதோ, ஒரு பெரும் சேதத்தை விளைக்காது நிற்காது.

பசி—இதுவரை, நம் தாயகத்தில், குறிப்பிட்ட ஒரு நிலைவரை தான் போய் நின்றது — அடுத்தபடிக்கும் இப்பொழுது போய்விட்டது!

பசி பிச்சைக்காரனாக்கியிருந்தால் நிலைமை வேறு — திருடனாக்கிவிட்டது!—இந்த நிகழ்ச்சி, ஒரு அபாய அறிவிப்பு!!

அரிசியில்லை—புல்லைத் தின்றான், புண்ணாக்கை உணவாகக் கொண்டான், கத்தாழையைப் புசித்தான்—இது சாதாரண நிலை பசியைப் போக்க, பிள்ளையை விற்றாள் தாய்—விரகும்படி விரட்டினான், தந்தை—இது சாதாரண நிலை என்று கூற முடியாவிட்டாலும், எச்சரிக்கை இல்லை—இரங்க வேண்டிய நிகழ்ச்சி!

பட்டினிப் பிணங்கள் நாள்தோறும் — கண்ணீர் விட வேண்டிய காட்சி!

ஆனால், திருடனாகிவிட்டான் மனிதன் என்றால — அடுத்துக் கொலைகாரனாக மாறவும் தயங்கவும் மாட்டான் என்பதற்கு முன்னறிவிப்பு—எச்சரிக்கை!!

இந்தச் சூழ்நிலையை மிக உன்னிப்பாகக் கவனித்துப் புரிந்துகொள்ள வேண்டும்-ஆம், தவறினால் திராவிடம், பிரான்சாகும்! இது நிச்சயம்.

'காய்ந்த வயிறுகள்' தான் பிரஞ்சுப் புரட்சிக்கு அந்த நிலைமை தாங்கின—ஒட்டிய வயிறு தீட்டிய திட்டம் தான், பிரஞ்சுப் புரட்சி! சரித்திரம் சொல்கிறது — சர்க்காருக்கு இது தெரிந்திட வேண்டும்.

ஏற்பது இகழ்ச்சி என்பது அவன் இனச் சித்தாந்தம்—எனினும் இறுகாத மனம், பிச்சையேற்க மனம் ஒப்பிவிடும்.

அதனால்தான், நாவின்றித் தவித்திடும் பல நெசவாளிக் குடும்பங்கள், தலைமறைவாகச் சென்று பிச்சையேற்றிடவும் மனந் துணிந்து விட்டன.

ஆனால், நிலைமை முற்றிவிட்டது—'கும்பகோணம்' நாம் எதிர்பார்த்ததல்ல — எதிர்பாராததுமல்ல எனினும் நிதானத்துடன் கவனிக்க வேண்டிய நிகழ்ச்சி!

இன்று ஒருவன் திருடினான்—நாளை பத்துப் பேர் திருடலாம்—இன்னும் கொஞ்சத் தினங்களில் பத்து, நூறாகலாம்-பிறகு, நூறு ஆயிரமாகலாம். பிறகு ஒரு ஊரே, அவ்வேலையில் ஈடுபடலாம். இறுதியில் நாடே, புரட்சிக் காடாகலாம்!

திருடுவது, பஞ்சமா பாதகங்களில் ஒன்று என்பது அவனுக்குத் தெரியும்—தெரிந்தும் திருடுகிறான்-என்? அதுதான் விசித்திரம்—விபரீதம்! பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் என்ற பழமொழியை புது மொழியாக்கிக் கொண்டால் புரியும்.

பழைய சோற்றை எடுக்க அந்த வீட்டினுள் நுழைவதற்கு முன்னால் இருந்த மனிதன் வேறு—துணிந்து நுழைந்து விட்ட பிறகு இருக்கும் மனிதன் வேறு!

முன்னவன், பாவ, புண்ணிய எண்ணங்களில் நெளிந்திடும் மனிதன்! பின்னவன், எதற்கும், தன் இதயத்தைத் தயாராக்கிக் கொண்ட புது மனிதன்!!

உலக சரித்திரத்திலே வருகிற புரட்சிகளெல்லாம், இரண்டாம் பிரிவைச் சேர்ந்த மனிதனால் நடத்தப்பட்டன — இதனை நினைவில் கொள்ளவேண்டும்.

X X X

அவர்கள் கிளம்பினர், இரவில்—ஒருவர், இருவரல்ல, பதினெட்டு பேர்! 'வெறும்' ஆள்களாக அல்ல—தடிகள், கத்திகளோடு!

வயல்களில் மளமளவென இறங்கினர் முதிர்ந்து சாய்ந்த கதிர்களை வேகமாக அறுக்கத் தொடங்கினர். அறுக்கும் சத்தம் கேட்டதும், காவல்காரர்கள் விழித்துக் கொண்டனர்.

வயல், போர்க்களமாகிவிட்டது — அடி, உதை, குத்து, வெட்டு, எல்லாம் நடந்தன. கடைசியில் காயத்தால் இருவர் மரணமடைந்தும் விட்டனர்!

அறுத்த நெல்லை விடவில்லை — கொண்டு சென்று விட்டனர்!

பழைய சோறு திருடவில்லை, இப்பொழுது—நெல்லை, வீட்டிலே கூட அல்ல, வயலிலேயே சென்று திருடிவிட்டனர்.

நாம் எதிர்பார்த்ததுக்கும் மேலும் நடந்து விட்டது — ஒருவாரத்தில் இந்த மாற்றம் — 'கும்பகோணம்' முடிந்தது — இது விழுப்புரத்தை யடுத்த ஆனங்கூரில்!

திருடனாகிவிட்டான் மனிதன்—அதுவும் கூட்டமாகக் கிளம்பவும், கொலை புரியவுந் தொடங்கிவிட்டான்.

பசி, தனது முழு வேகத்தையும் காட்டத் துவங்கிவிட்டது!

பிச்சையெடுக்கும் நிலை போய், திருடத் தொடங்கினான் என்ற செய்தி கிடைத்தபொழுதே இது அபாய அறிவிப்பு என்று எச்சரிக்கை தரவேண்டும் — நிலைமை முற்றிவிட்டது மட்டுமல்ல, தடுக்க முடியாத அளவிற்கும் போய் விட்டது!

சட்டத்திற்கு மதிப்புக்கொடுக்கும் காலம்தான், பிச்சையெடுக்கும் நிலை; அது 'மலையேறிவிட்டது' என்று காட்டுவதுதான் 'கும்பகோணம்' — சட்டத்தைத் துச்சமென மதித்து துணிந்து விட்டான் என்பதை எடுத்துச்சொல்கிறது 'ஆனங்கூர்!'

அவர்களைப் பிடித்தனர் — விலங்கிட்டனர் சிறைப்படுத்தினர் — இ. பி கோ. 395, 397 பிரிவுகளின்படி வழக்குத் தொடுத்தனர் — எல்லாம் சரி, பசி, பாதகம் புரியவும், மனிதனை ஏவிவிடுகிற அளவு வளர்ந்து விட்டது என்பதை ஆளவந்தார்கள் உணரவேண்டும்.

பழைய சோறு திருடியவன்—அதுவும் பலமில்லாதவன்! ஆகவே பழைய சோற்றோடு நின்று விட்டான்.

ஆனங்கூரில், 'பசியால்' பைல்வானனர்கள் — கத்திகள் நடமாடின, தடிகள் பேசின, அங்கு!

இரண்டு நிகழ்ச்சிகளையும் நாம் இணைத்துப் பார்க்கிறபொழுது அஞ்சுகிறோம் — நிலைமை, சமாளிக்க முடியாததாகிவிடுமோ என்று சஞ்சலப்படுகிறோம்!

சட்டத்தை மதிப்பதில்லை. சமாதானத்தை நிலை நாட்டுவதில்லை, குழப்பமும், கொந்தளிப்புமேற்பட வழி செய்கிறோம் என்று பழிசொல்ம, நாம், சட்டவரம்பிற்குட்பட்ட சில 'அடையாள' நடவடிக்கைகளில் ஈடுபடும்பொழுது! ஆனால் இதோ, இந்த நிகழ்ச்சிகள் சொல்கின்றன, பகிரங்கமாகவே, இனி சட்டங்கள் வளையும், நிலைமைக்குத் தகுந்தமாதிரி நெளியும், ஏனெனில் மக்கள், சட்டத்திற்கு அடங்கியிருக்க வேண்டும் என்ற நிலை, பிழைக்கும் நிலைமைக்கு, பசியால், பட்டினியால் துரத்தியடிக்கப்பட்டுவிட்டார்கள் என்று!

சட்டத்தை மீறுகிற உணர்ச்சி சாதாரணமானதல்ல — ஆனால் இப்பொழுது ஏற்பட்டுவிட்டதே!

சட்டத்திற்கு மதிப்புத் தந்த காலம்தான்—பிச்சை எடுத்தநிலை!

பிச்சைக்காரன் திருடனாகிவிட்டான் திருடன் கொலைகாரனாகவும் மாறிவிட்டான்!

'கும்பகோணம்' முதலில்—அடுத்தது 'ஆனங்கூர்!'

சட்டத்திற்குப் பயந்தபொழுது ரேஷன்விதிகளை மீறித்திருட்டு அரிசி வாங்கினான் — அதிகாரிகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு உணவுப் பொருள்களைக்கொண்டுவந்தான்.

திருட்டு ரேஷன் கார்டுகளைக் கூடத் தயார் செய்தான் — சட்டத்திற்கு அடங்கவேண்டும் என்ற உணர்ச்சி இருந்த காலம் இது! இப்பொழுதோ திருடியும்விட்டான் — கொலையும் செய்துவிட்டான்.

பயிரிடும் நிலங்கள் 'பிளாசி'யாக மாறிய நிகழ்ச்சிகள் கேள்வி பட்டதுண்டு-அவைகள் வேண்டுமென்றே சில 'சதிகாரர்கள்' செய்தது என்று கூறினர்-ஆம் அதற்கேற்ற வகையில் 'தீயிடுவது' உணவுப் பொருள்களை அழிப்பது போன்றவை நடந்தன.

இன்றோ நெல்லை அறுத்தனர்—தடுத்தவரை அடித்தனர்—அந்த அவசரத்தில் இரண்டு கொலைகள்! நிலைமைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இரண்டு நிகழ்ச்சிகளையும் அலட்சியமாகக் கருதுவதற்கில்லை—இவை ஆளவந்தாருக்கு அபாய அறிவிப்பு —எச்சரிக்கை தருகின்றன!

இந்திய உணவு நெருக்கடி மிக மோசமாக இருக்கிறது — நெருக்கடியைச் சமாளிக்கவேண்டிய 'திருப்பிரம்மங்களோ' நிலைமையைப்புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

அதுவும், சென்னை, சீரழிகிறது, உணவுக்குறை பாட்டால்! இதனை உணரவேண்டும்.

சென்னைக்கு வந்த உணவு மந்திரி முன்ஷியாரோ நிலைமையை உணர்ந்ததாகத் தெரியவில்லை-பத்து இலட்சம் டன் உணவுப் பொருள் கேட்டால், நான்கு இலட்சம் டன் தர முயற்சிப்பதாகக் கூறிச் சென்றுவிட்டார் கேட்டது 10 இலட்சம்-தருவதாகக் கூறியது 4 இலட்சம் - 6 இலட்சத்திற்கு எங்கே போவது? மாகாண சர்க்காருக்கு வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை வரவழைக்கும் உரிமையும் கிடையாது.

ஆம், இது நல்லதல்ல — எதிர்காலத்திலே ஒரு பயங்கர சூழ்நிலையை ஏற்படுத்தத்தான் உதவும் என்று எச்சரிக்கிறோம்

மனிதன், பழஞ்சோற்றை திருடத் தொடங்கிவிட்டான் — பிறகு தான் பணம், துணி, மணிகளைத் திருட முயற்சித்தான்—இது 'கும்பகோணத்திலே' ஆனால் வெகு விரைவில குமுறும் வயிறு உலவும் இடங்களிலெல்லாம் இந்தத்தகவலை எதிர்பார்க்கலாம் — ஆகவே 'கும்பகோணம்' ஒரு அபாய அறிவிப்பு! கனம் முன்ஷியாரின் திருப்பார்வைக்கு நாம் சமர்ப்பிக்கும் காணிக்கை — சென்னை யாட்சியாளர் மூலம் இந்தப் பயங்கரப்படையலை அனுப்புகிறோம்!

*

செங்கற்பட்டு மாவட்ட மாநாட்டு வரவு செலவுக் கணக்கு

டிசம்பர் 23, 24-ம் நாட்களில் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மாநாட்டின் வரவு செலவுக் கணக்கு:—

வரவு ரூ.	9605—8—0
செலவு ரூ.	6592—2—0
இருப்பு ரூ.	3013—6—0

மேற்படி தொகையில் சென்னைத் தலைமைக் கழகக் கட்டிட நிதிக்காக ரூபா ஆயிரமும், உள்ளூர் கழகக் கட்டிடத்துக்கு ஒரு இடம் வாங்குவதற்காக ரூபா 2013—6—0ம் கொடுப்பதென மாநாட்டு செயற்குழு 4—2—51ல், கூடிய கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானித்தது. தீர்மானம் முழு மனதுடன் ஒப்புக்கொள்ளப் பட்டது.

பரலோக பாங்கர்கள்

இம்மையை மறந்து, மறுமைக் காவன மக்களுக்கு அருளிடும் 'மகான்கள்' அவர்கள்—ஒருவருக்கொருவர் போட்டியிட்டுக்கொண்டனர்.

மண், பெண், பொன் ஆகிய மூவாசைகளை அறுத்து, மும்மலம் நீக்கி, முக்தி தேடி, மோட்ச சாம்ராஜ்யத்திற்கு அனுமதி நாடி ஆண்டவனை அனுதினமும் வேண்டிக் கிடக்கும் சித்தர்கள் அவர்கள் — எனினும் ஒருவர் மீது ஒருவர் வழக்கு போட்டனர்.

ஆண்டவனுடைய பிரதிநிதிகளாம் அவர்கள்—அவர்களுக்குள் 'சாதாரண விஷயத்திலே' தகராறு—இதனைத் தீர்த்துவைக்க ஈசன், சிவகாமி நேசன் வரவில்லை கோர்ட்டுக்குச் சென்றனர்—'வழக்குரை காதை' நடத்தியது, சாமான்ய வக்கீல்கள்—தீர்ப்பளித்தவர் திரிபுரமெரித்தவரல்ல, காளிங்க நர்த்தனம் செய்தவரல்ல — 'நீச' பாஷையைப் படித்து நீதிபதி பதவியிலே இருக்கும் 'பாவ உலக' ஜீவன்கள்!

ஆண்டவன் உலகத்திற்கு வழிகாட்டிடுவோம் என வாய்ப்பறை சாற்றி, மக்களின் பொருளைச் சுரண்டி, மடங்களை ஏற்பாடு செய்து கொண்டு வாழ்பவர்கள்—பக்தர்கள் அவர்களை, மகான்கள், ஜீயர்கள், ஜீவன் முக்தர்கள் என்றெல்லாம் பாராட்டுகின்றனர்.

துவாரகை, ஸ்ரீ சாரதா மடத்திலேதான் அந்த வழக்கு! 1916-ல் ஸ்ரீ மாதவ தீர்த்த மகராஜ் என்பவர் காலமானார். அவருக்குப் பின்னால், யார் அந்த இடத்திற்கு வருவது என்று மூவருக்குள் போட்டா போட்டி — அப்பீடத்திற்கு வாரிசுரிமை வேண்டி வழக்குப் போட்டவர்களெல்லாம் கீழ்க் கோர்ட்டில் தோல்வி கண்டனர். தோற்ற மூவரில், இருவர் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொண்டார்.

ஆண்டு பலவாக அன்னாகாரமின்றிக் கடுந்தவமிருந்தார் இவர், ஒற்றைக் காலில் நின்று தவம் செய்தவர் இவர், புற்று வளர்ந்தும், தன் நோன்பை நிறுத்தாதவர் இவர் என்று பழங்கால ஏடு, ரிஷிகளைப் பற்றி, மகான்களைப் பற்றிச் சொல்லியதுண்டு—நாடும் கேட்டதுண்டு!

ஆனால் துவாரகை 'சீலர்கள்' 34 ஆண்டுகள் வழக்காடினர்—எப்படித் தபோவலிமை! எப்படிப் பக்தி மார்க்கம்!

இந்நாட்டில் பக்தியின்பேரால் பணத்தைக் கொள்ளையிட்டுக் குவித்து வைத்துக்கொண்டு, கும்மாளம் போடுகிறார்கள் சில சூதுக்காரர்கள்—ஆகவேதான் இவ்வளவு போட்டி, பொறாமை! அங்கு, 'சர்ப்ப நாட்டியம்' ஆடுகின்றனர்!

'பக்தி பாங்க்' நடத்தி, அதன் மூலம், தாங்கள் சுகபோகிகளாக உலவுவதால்தான், 'நான் முந்தி, நீ பிந்தி' என்று போட்டி போடுகின்றனர்.

இகலோக ஆசைகளை அறவே வெறுத்தவர்கள்தான், மடாதிபதிகள் என்று கூறிக்கொண்டு, அறுசுவையுண்டியை உண்டு கொழுத்து, பளபளத்த மேனியுடன் பல்லக்குச் சவாரி செய்கிறார்கள்! பேசுவது இந்தப் பூவுலக மனித இச்சைகளை ஒழிப்பதென்பது—ஆனால், செய்வது நேர்மாறு!

மடாதிபதிகள்—ஜடாமுடி வைத்துள்ள 'மைனர்கள்'—கிரீடம் இல்லாத ராஜாக்கள்—போன்று திரிகிறார்கள். ஆகவேதான், மூவர் போட்டியிட்டனர்.

போட்டி, அவர்களுக்குள்ளே தீர்ந்துவிடவில்லை — ஈசனும் வந்து வழக்கை முடிக்கவில்லை — கோர்ட்டுக்குச் சென்றார்கள். கடவுளின் பிரதிநிதிகள்—அதுவும் முப்பத்து நான்காண்டுகள் ஓயாது, ஒழியாது வழக்காடினர்.

கடைசியாக வழக்கு எப்படி முடிந்தது தெரியுமோ, வழக்கிட்டவர்களில் ஒருவர், வழக்கு முடிவதற்குள் இறந்து விட்டார் — ஆகவே உயிருடனிருந்தவருக்குச் சாதகம் கிடைத்தது.

சுவாமி ஸ்ரீ அபினவசச்சிதானந்த தீர்த்தரே அந்தப் பீடத்திற்கு சங்கராச்சாரியாராக அங்கீகரிக்கப்பட்டார்.

இந்த 'மகான்களின்' வழக்கைத் தீர்த்து வைத்தவர்கள் — 'சாமான்யர்கள்' ஜஸ்டிஸ் பகவதி, ஜஸ்டிஸ் சைனானி ஆகிய இருவருந்தான்!

'பக்தி பாங்க்' நடத்திடும், இந்தப் 'பரலோக பேங்கர்கள்' போட்டியிடுகிறார்கள் — மக்களும் பார்க்கிறார்கள், இந்த மகானுபாவர்களின் யோக்கியதையை — இருந்தும் இன்னும் சிலர் நம்புகிறார்கள் என்றால் ஆச்சர்யம் நமமை அள்ளி விழுங்கி விடுகிறேன் என்று பயமுறுத்துகிறது—ஆனால் 'பரலோக பாங்கர்களின்' பழைய மகத்துவம் குறைந்து கொண்டு வருகிறது என்பது மட்டும் மறுக்கமுடியாத உண்மை!

தோழர் மு. கருணாநிதி

நோய்வாய்ப்பட்டு உடல் நலம் குன்றி மீண்டும் சீர்பெற்று வருகிறதென்றாலும், டாக்டர்கள் இன்னும் குறைந்தது ஆறு மாதங்களுக்கு பூரண ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

முன்னேற்ற முரசு

*

. திராவிடத்தின் எழுச்சு முரசு கொட்டி, வாரம் வாரம், திராவிடரின் சிந்தனைக்கு அரிய கருத்துவிருந்து சுமந்து வந்து உண்பித்து உவகை யூட்டுகிறது 'முன்னேற்ற முரசு'.

சென்னையிலிருந்து தோழர் பீ. இராமசாமியை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இவ்விதழ் திராவிடர்தம் ஆதரவிற்கும், அன்பிற்கும் உரியது!

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்க, ரங்கநாதன் மிகவும் ஒத்துழைத்தான்.

ஆண்டாளைக் கொண்டுவந்து ஆலயத்தில் விடுத்தனர். ரங்கநாத பெருமானின் திவ்ய தரிசனமும் கிடைத்தது. எல்லோரும் சென்றனர்.

அவளுக்கு அளித்த பணிகளோ, விளக்கேற்றல்—விடியற்காலையில்—ஆலயம் துலக்கல், மலர் தொடுத்தல், விடியற்காலை என்றாலே அவளுக்குத் தித்திக்கும் தேன் பொழுதாயிற்றே — அவள் ஏன் அறப்பணி செய்யத் தயங்கப்போகிறாள்.

இடம்:- கோயில்

காலம்:- விடியற்காலை

இருப்போர்:- ரங்கநாதன், கோயில் அர்ச்சகர், ஆண்டாள்.

ரங்:- அர்ச்சகரே, கூறியதெல்லாம் நினைவிலிருக்கிறதா.........நாங்கள் போய் ஒருமணி நேரங்கழித்துக் கூவவேண்டும். எங்கே ஒருமுறை சொல்லும்.

ஆ:- ஆ......என்ன ஜோதி...... தேவஜோதி...தெய்வீக வெளிச்சம் ...ஆண்டாள் எங்கேபோகிறாய்?... ரங்கநாதர் ஆலிங்கனம் செய்கிறாரே! ...ஆ...அதோ, ஜோதியில் கலக்கிறாள், கரைகிறாள் — ஜோதியிலேயே மறைந்துவிட்டாள்......

ரங்:- ஆம்; இப்படி, நீர் உரக்கக் கூவவேண்டும்.

ஆ:- ஆகா......அப்படியே!

[பணப்பை ஒன்று தருகிறான் ரங்கநாதன்.]

காதல சிட்டுகளோ, சென்னையை நோக்கி, முதல் வகுப்பில் பிரயாணம் செய்கின்றன

ரங்கநாதன் மடியிலே அவள்—அவன் கையிலே திராட்சைக் கொத்து—அதனை அவள் வாயருகில் கொண்டு வருவதும், பிறகு உயர்த்துவதுமாக விளையாடுகிறான்.

விடியற்காலை — இன்னும் சரியாக ஒளி வரவில்லை வெளியில்

இடம்:- ஓடும் ரயில்

காலம்:- விடியற்காலை

இருப்போர்:- ரங்கநாதன், ஆண்டாள்.

ரங்:- விடிந்தால் சென்னையில் இருப்போம நாம்.

ஆ:- காதலா, அங்கு எங்கு தங்குவது?

ர:- அட பைத்தியம் — அங்கு எனக்கு சொந்த கம்பெனியே இருக்கிறது!

ஆ:- பைத்தியமாக இருந்த வரை போதும்—உங்கள் கம்பெனி ங்கு இருக்கிறது? என்ன கம்பெனி?

ர:- ரங்கநாதா பிக்சர்ஸ் என்ற சினிமாபடம் எடுக்கும் கம்பெனி. அதில் இப்பொழுது ஆண்டாள் கல்யாணம் தயாராகிறது!

ஆ:- ஆண்டாள்கல்யாணமா? எந்த ஆண்டாள்?

ர:- இந்த ஆண்டாள் என்று கூட வைத்துக்கொள்ளேன் — நீயேகூட நடிக்கலாம்.

ஆ:- நானா......

ர:- ஏன் நடிக்கக் கூடாது? உன்னிடம் மறைந்திருக்கும் கலைகளை உலகுக்கு அர்ப்பணிக்கத் தடையென்ன?

ஆ:- அப்படியானால், படத்திற்கு பெயர்மாற்றம் செய்யவேண்டும்.

ர:- என்ன பெயர்?

ஆ:- விடியற்காலை.

ர:- ஏன் விடியற்காலை விருந்து என்றிருக்கக்கூடாதா?

ஆ:- ஊ ஹூம்.........

['இச்' சென்று பல ஒலிகள்-அதனை பிறர் காதுகளில் படா வண்ணம், 'ஊகு......' என்று பேரிரைச்சலோடு, ரயில் ஓடிக் கொண்டிருந்தது]

✲

1-ம் பக்கத் தொடர்ச்சி

முதல அனைவரும் கட்டாயமாகப் படித்தாக வேண்டும், என்று கூறுபவர், திராவிடர் இயக்கத்தவரல்ல—இருந்தால்தான் 'ஒரு கை' பார்த்து விடுவார்களே, ஒய்விலாது உழைத்துத் தமிழகத்தைத் திராவிடத்தாரிடமிருந்து மீட்கும் திருப்போரில் ஈடுபட்டுள்ள திருத்தொண்டர்கள்!—ஆங்கிலத்தின் அவசியத்தை அழுத்தந் திருத்தமாக வலியுறுத்தியிருப்பவர், அன்னை பாரதமாதாவின் ஆசியால், அகில இந்தியாவை ஆட்சி புரியும் காங்கிரஸ் மந்திரிகளிலே ஒருவரான, ராஜகுமாரி அமிர்த கௌரி அம்மையாராகும்! பாடியாலாவில் ஒரு பள்ளிக்கூட விழாவிலே அம்மையார் அறைந்திருக்கிறார். இதுபோல, பிப்ரவரித் திங்கள் இரண்டாம் நாளில்!

கோபம் கொப்பளிக்கிறது—கன்னித் தமிழ் கூடகூடவெனப் புரண்டோடி வருகிறது—ஆனால் தொண்டை அளவிலே நின்றுவிடுகிறது.

கண்டிக்கலாம், காரசாரமாக — (காரசாரமாக இல்லாததால்)-அடுக்கடுக்காகச் சொற்கள் உருண்டோடி வருகின்றன—அகராதியும் பக்கத்திலேயே இருக்கிறது துணை செய்ய, சந்தமுள்ளச் சிந்து — வந்து தவிசெய்கிறது—எல்லாம் சரி—ஆனால் கண்டிக்க முடியாதே — பேசுபவர், ராஜகுமாரி அமிர்த கௌரி அம்மையாரல்லவோ — காங்கிரசாயிற்றே— காங்கிரஸ் தலைவர்களிலே ஒருவராயிற்றே—அகில இந்திய அரசியலை நடத்தும் ஆற்றல் கொண்ட பாரத மணிகளில் ஒருவரான பெண்மணியல்லவா பேசுகிறார்கள், ஆங்கிலம் கட்டாய பாடமாக இருக்கத்தான் வேண்டுமென்று—எப்படிக் கண்டிப்பது! கண்டித்தால் விபரீதமல்லவா ஏற்பட்டுவிடக் கூடும்!

'அதுகள்—இதுகள்' கூட்டத்தோடு, பாரத மணிகளில் ஒருவரான ராஜகுமாரி அமிர்த கௌரி அம்மையாரும் சேருகிறார்கள்! சோராமலிருக்க முடியுமா! அறிவு அழைக்கிறது அம்மையாரை, ஆர்ப்பரிப்பைக் கண்டு அஞ்சிவிடுவார்களா! அவர்கள் நன்கு அறிவார்கள், இந்த ஏசல் பாடுவோர், தம்மை நெருங்க மாட்டார்கள் என்று! ஏசல் பாடுவோரும் நன்கு புரிந்துகொண்டுதான் இருக்கிறார்கள், தங்கள் கோபப் பார்வையையும் கொதிப்பான பேச்சையும், அப்பக்கம் திருப்பலாகாது—என்ற உண்மையை! கோபம் கொதிக்கிறது — கொதிப்பைப் போக்கிக் கொள்ளவா வழி தெரியாது வழி காட்டும் வல்லவர்களுக்கு! திராவிட இயக்கம் இருக்கவே இருக்கிறது, தாக்குவோம, மேலும் மேலும் தாக்குவோம்,—என்று பரணி பாடினால், கொதிப்பு குறையாமலா போகும்!

அச்சுக் கோர்ப்போய்!
அச்சுக் கோர்ப்போய்!
நச்சுச் சொற்கள் நாலாயிரமும்
இச்சையுடன் தந்தேன்
இன்றே கோர்த்திடுக!

என்று பாடி தங்கள் துக்கத்தையும், கோபத்தையும், துடைத்துக் கொள்வார்களா!

—

திராவிட நாடு

ஞாயிறு] 18—2—51 [காஞ்சி

கண்ணீர் துடைக்க! (1)

"அம்மா! சோச்சி......"

"சீ! சனியனே, சும்மா கிட!"

x x x

தான் பெற்றெடுத்த தங்கம், அழுது கண்ணீர்வடித்து, துவண்டு சுருண்டு கிடக்கும் அதைக் கண்டதும அவளது இதயத்திலே ஒரு புயல்! 'ஏனிந்த உலகில் பிறந்தோம்' என்ற ஏக்கத்தைத் தூக்கிக்கொண்டு அவளது பெருமூச்சுகள் பேசுகின்றன. பெருமூச்சுகளா, அவை?— அல்ல, அல்ல—பட்டினி வயிற்றின் அடியிலிருந்து கிளம்பும் அனல் வீச்சுகள்! அதன் கொடுமையை அவ்ளால் தாங்க முடியவில்லை. 'பாழும் தெய்வமே' என்று நொந்து கொள்ளவும், சக்தியில்லாத நிலை. தள்ளாடுகிறாள் — இடுப்பிலே குழந்தை!

பார்வையிலோ பசி வெறி! துடிக்கும் இதயம்! கொதிக்கும் குருதி! காற்றிலே அவளது, வறுமையின் கதையைச் சொல்வதுபோல, பறக்கும் கூந்தல்! ஏழைகளுலகு இது என்று கூறும், கந்தல் ஆடை!

x x x

சாகிறார்கள்—பட்டினியால்!

வீதிகளிலே அலைகின்றனர் — "வேலை கிடைக்குமா வேலை?" என்று கூவியவண்ணம்!

குடும்பங்கள் குட்டிச் சுவர்களாகி விட்டன!

பலர் – பரதேசிகள் உருவில்!

நாடோடிகள்-அவர்கள் குடும்பம்!

நடுத்தெருவில் பெண்கள்!

என்ற வேதனைக் காட்சிகள், விபரீதம் உருவாகிக் கொண்டிருப்பதை, படிப்படியாக உணர்த்திக் கொண்டிருக்கிறது. இந்தக் காட்சிகளை, நாமும், அப்போதைக் கப்போது, செய்திகளாக மட்டுமல்ல, "பாருங்கள் இந்தப் பரிதாபத்தை" என்று படங்களாக எடுத்துப் பிரசுரித்தோம், அப்போதாவது இந்த ஆள வந்தார் கண்களில் நாட்டின் வேதனை, படாமலா போய்விடும் என்ற ஆசையால்

கண்ணில் தென்பட்டதோ, இல்லையோ! எதற்கும் வாயைத் திறவாமலே காலந் தள்ளும் இந்த சர்க்கார் பேசாமலே இருந்தது! குமுறும், எரிமலை வெடிக்காமலா போகும்? அதுவும் ஏழை எரிமலை!!

விளைவாக சேலம் நெசவாளர்கள், 10-1-50 அன்று, "நூல் கொடு! பஞ்ச நிவாரணம் செய்!!" என்று முழக்கமிட்ட வண்ணம் கலெக்டர் அலுவலக முன் மறியல் துவக்கினர். அமைதியோடு மறியல் துவக்கி நெசவாளர்களின் நியாயமான கோரிக்கைகளை மதிக்க மறுத்த காங்கிரஸ் ஆட்சி—அவர்களின் பட்டினிக் குரலை, தனது அடக்குமுறையால அடக்கிவிட எத்தனித்தது!

144!-பாய்ந்தது

ரிசர்வ் பட்டாளம் குவிந்தது

ஊர்வலமோ, பொதுக்கூட்டமோ நடத்தக்கூடாது என்றனர்—மக்கள் சர்க்காரின் தடையை தூசெனமதித்தனர்.

ஊர்வலம்-நடத்தினர். மாபெரும் ஊர்வலம், தடையுத்தரவை மீறி, நகரமெங்கும் சென்றது.

"துப்பாக்கி! பார் - சுடுவோம்" என்று போலீசாரை அணிவகுத்து நிறுத்தினர்.

"சுடு! பரவாயில்லை. பட்டினியால் உயிர் போவதிலும் பாய்ந்தது குண்டு-செத்தோம் நிமிடத்தில்" என்று கூறியவண்ணம், மார்பைக் காட்டி நின்றனர் பலர்.

சட்டம் மிரண்டது!

"பொதுக்கூட்டம் நடத்தலாகாதா?-பேச்சுரிமையுமா, இல்லை!" என்று கேட்டவண்ணம், திராவிட முன்னேற்றக் கழகச் செயல்வீரரும், நெசவாளர் தலைவருமான சேலம் ஏ. சித்தையன், நெசவாளர் தலைவர் பூர்ணையா ஆகியோர், 144ஐமீறினர்.

அவரைத் தொடர்ந்து, பலர், தடையை மீறினர்.

சிறை-நிரம்பியது!

கிழவர், குமரர், தாய்மார், குழந்தைகள் எல்லாம் சிறையில்!

நூற்றுக்கணக்கானோர், சிறைக்குள்!

சட்டமும் அடக்குமுறையும்தூள்! தூள்!!

கட்டுக்கடங்காதநிலை.

தனது தர்பார்மூலம், உரிமைக் கிளர்ச்சியை அடக்கமுனைந்த சர்க்கார் மிரண்டது. பயந்தது! அதன் விளைவாக.

144 வாபஸ்

தலைவர்கள் விடுதலை.

வாரம் 2—8—0 பஞ்சப்படி.

ஆகிய கோரிக்கைகளை, ஏற்றது! 'விரைவில்' எல்லோருக்கும் நூல் கிடைக்கச்செய்கிறோம" என்று உறுதியும் தந்திருக்கிறது, சர்க்கார்,

x x x

சேலம் நிகழ்ச்சியைத்தொடர்ந்து சென்னை மாகாணத்தின் பல பாகங்களிலும் நெசவாளத் தோழர்கள், உரிமைப்போர், துவக்க முரசொலித்துவிட்டதாக அறிகிறோம்.

பிரகடகோட்டையா (ஆந்திரா)
அக்கலக்கோட்டை
திருச்செங்கோடு
சடையநல்லூர்
அருப்புக்கோட்டை
ஸ்ரீவில்லிபுத்தூர்
காஞ்சிபுரம்
நெல்லூர்
சங்கரநயினார் கோயில்
மதுரை
ஈரோடு
இடைப்பாடி
உறையூர்
துறையூர்

முதலிய, பல இடங்களில், உரிமைப் போருக்கான ஆயத்தங்கள் செய்யப்

(8-ம் பக்கம் பார்க்க)

தி. மு. க. பொதுக்குழு

திராவிட முன்னேற்றக்கழக பொதுக்குழு உறுப்பினர்கள் கூட்டம் 11—3—51 ஞாயிறு அன்று காஞ்சியில் நடைபெறும்.

அதற்கானஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதோடு, உறுப்பினர்களுக்கு அழைப்புகளும் அனுப்பப்பட்டுள்ளன.

தவறாது எல்லோரையும் கலந்து கொள்ள அழைக்கிறேன்.

சி. என். அண்ணாதுரை.

வெட்கம்!

அரிசி விலையை அதிகரித்துள்ளோம் என்று சென்னை சர்க்கார் வெளியிட்டிருக்கிறார்கள்.

ஒரு படிக்கு 4 பைசா வீதம் விலையை அதிகமாக்கியுள்ளதாக, பொது மக்களுக்கு, தெரிவித்துள்ளார்கள்.

இந்த உத்திரவு பிப்ரவரி 11ந் தேதியிலிருந்து அமுலுக்கு வரும் என்றும் திட்டவட்டமாக, ஆட்சியாளரின் அறிக்கை கூறுகிறது.

பசி போக்க உணவில்லை! கிடைக்கும் உணவுப் பொருளை வாங்கவும் கையில் காசில்லை! காசு கிடைக்க, உழைக்கவோ வழியில்லை!—என்று. எங்கும் 'இல்லை நாதம்' கிளம்பிக் கொண்டிருக்கும், வேதனையான நேரம் இது.

நெசவாளர் அலறல், தொழிலாளர் குமுறல், ஏழையின் அழுகுரல், எங்கும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

இந்த நேரத்தில் அரிசியின் விலையை படிக்கு 4 பைசா அதிகமாக்கியிருக்கிறது, மாகாண சர்க்கார்.

விலையை அதிகமாக்குவதற்கு, மாகாண சர்க்கார், காட்டியிருக்கும் காரணம், எல்லோரது கவனத்துக்கும் உரியதாகும்.

விலையை அதிகமாக்கினால் — பொருள் பதுங்காது கிடைக்கும்.

பொருளை விற்று பணமாக்கலாம் என்ற ஆசையோடு, தானியங்களை வைத்திருப்போர் முன் வருவர்— என்ற, இக்காரணங்களுக்கல்ல, விலையை உயர்த்துவது.

விலை மட்டுந்தான் உயர்கிறது— விலை உயர்வால் பலன் அதிகமாகும் என்ற அறிகுறி இல்லை.

விலை மட்டுமே அதிகமாகிறது; தானியம் சகஜமாகக் கிடைக்குமா, சஞ்சலம் போகுமா என்ற உறுதி இல்லை.

எப்போதும் போல அரிசிச்சுத் திண்டாட வேண்டியதுதான்; அரிசி கிடைப்பது கஷ்டம்தான்.

எனினும், விலையை உயர்த்தியிருக்கிறது, சர்க்கார்.

பளுதாங்க முடியவில்லையே என பதறுபவன் மீது மென்மேலும் பளு!

இந்த விலை அதிகரிப்புக்கான காரணத்தைக் கேளுங்கள்.

"மத்திய சர்க்கார் கொடுத்து வந்த மான்யம் குறைந்து விட்டதால்........"

இதுதான்! மத்திய சர்க்கார், விலை நிலையாக இருப்பதற்காக மாகாணங்களுக்குத்தரும் மான்யத்தை நிறுத்தி விட்டது. ஆகவே, அத்தொகையை ஈடுகட்ட

"பொதுமக்களிடமிருந்து வசூலிக்க"

முடிவு செய்துள்ளோம், என்று, தங்கள் அறிக்கையில், மாகாணசர்க்கார் குறிப்பிட்டுள்ளனர்.

பொதுமக்கள் என்னவோ, போக போக்கியங்களில் கிடப்பது போல, முடிவு செய்து வெளியிட்டிருக்கின்றனர் — 'பொதுமக்களிடமிருந்து வசூலிப்போம்' என்று!

'இந்திய மாதா', கைகழுவ விட்டதும், ஏழை மக்கள்மீது பாய்கிறார்கள்!

இந்திய சர்க்கார், கைவிரித்ததும், பொதுமக்கள் தலையில் கைவிரிக்கிறார்கள்!

வரிப் பணத்தை அள்ளிச் செல்லும் மத்திய சர்க்கார் மான்யமில்லையென கைவிரிக்க—மக்களை நோக்கி, புறப்படுகிறார்கள்!

ஒரே இந்தியா—என்று, இவர்கள் கூறிக்கொள்ளும் போலி ஜம்பத்துக்கு நாம் இரையாகிறோம்!

வெட்கங் கெட்ட நிலை!

"நாம் மிகப் பலர். நம்மை ஒழித்துவிட யாராலும் முடியாது. நாம் நினைத்தால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். செய்ய முடியும். நான் அவர்களுக்கு (பார்ப்பனர்களுக்கு) கூறுகிறேன். நீங்கள் நயவஞ்சகம் உடையவர்கள். நயவஞ்சகம் எப்போதும் வெற்றிபெறாது. நாங்கள் நேர்மையுள்ளவர்கள். எங்கள் கொள்கையால் மக்கள் நீதியோடும் நடத்தப்படுவார்கள்"

எஸ். எஸ். மாரிசாமி
(காண்டீபம்)
பெரியகுளம் வகுப்புரிமை மாநாட்டில்
28—1—51.

பெரியகுளம்—மாநாடு

★

"கொள்கைகள் பலவாக யிருக்கலாம்—ஆனால் குனிந்திருக்கும் சமுதாயத்தை நிமிர்க்கும் நல்ல பாதையிலே நடக்கத் தவறோம்" என்று, எதிரிகளுக்கு, எச்சரிப்பதுபோல காட்சி தந்தது 28—1—51 மதுரை மாவட்டம் பெரியகுளம், திருவள்ளுவர் காவணத்தில் நடைபெற்ற, சமூக உரிமை நீதி மாநாட்டைக் கண்டபோது. 'காண்டீபம்' ஆசிரியர், இளமை வீரர், எழுச்சிக் காளை தோழர் எஸ். எஸ். மாரிசாமியின் வீரம் துள்ளி விளையாடிய தலைமையுரையும், 'பிரசண்ட விகடன்' ஆசிரியர், நீதிச் சின்னம், தோழர் நாரண. துரைக்கண்ணனின், நேர்மை யுள்ளம் முழக்கிய தமிழ்ப் பேச்சும், கூடிக்கிடந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் இதயங்களை யெல்லாம், பூரிக்கச் செய்தது.

மாநாடு துவக்கத்தில் வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் பால்ராஜ் எல்லோரையும் வரவேற்று, அரியதொரு சொற்பொழிவாற்றினார். பிறகு தலைவராகத் தோழர் மாரிசாமியைப் பிரரேபித்து உடுமலை நகர சபைத் தலைவர் எம். எஸ். கனகராசன், புலவர் நெடுமாறன், எஸ். முத்து, கே. எஸ். ராசமான் ஆகியோர் பேசினர்.

மாநாட்டில் தி. மு. க. பொதுச் செயலாளர் அண்ணாதுரை, நெடுஞ்செழியன், என். வி. நடராசன், ஈ. வே. அ. வள்ளிமுத்து, மதுரை அய்யாச்சாமி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கலைஞர், டைரக்டர் ஏ. எஸ். ஏ. சாமியும், மாநாட்டில் கலந்து கொண்டு வீர முழக்கமிட்டார்.

'காதல்' பத்திரிகை ஆசிரியர், அரு. இராமநாதன் ஆற்றிய வீர உரை, 'விழிப்புற்ற தமிழகம் இது' என்று காட்டிற்று.

அன்று இரவு, தோழர் அரு. இராமநாதன் எழுதிய 'வானவில்' என்ற நாடகத்தைத் தமிழிசை நாடகக் குழுவினர் நடித்தனர்.

சமூக உரிமை காக்கும் நோக்குடன் சர்வ கட்சித் தோழர்களும்

(அடுத்த பக்கம் பார்க்க)

தஞ்சை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு

மாயவரம்

சி. நடராசன் பந்தலில்

தலைவர்: **என். ஜீவரத்தினம்** (சென்னைகார்ப்பரேஷன் கவுன்சிலர்) துவக்குபவர்: **காஞ்சி கலியாணசுந்தரம்** பொதுச் செயலாளர்: **சி-என்-அண்ணாதுரை** கலந்து கொள்வார்.	அழகிரி அரங்கில் **மார்ச்சு** **3, 4.** தேதிகள்	**நாடகங்கள்** அண்ணாதுரை, நடிக நட்சத்திரம் கே. ஆர். ராமசாமி பங்கு கொள்ளும் **சந்திரமோகன்** **நீதிதேவன் மயக்கம்**

கழகச் செயல் வீரர்கள் எல்லோரும் பங்கு கொள்வர்.

கே. கே. நீலமேகம்	ஆ. முத்துக்குமாரசாமி	வி. பராங்குசம்
வரவேற்புக்குழுத் தலைவர்	ஆர். ஜோசப்	ஆர். பழனிச்சாமி
வை. மாணிக்கம்	தொண்டர் படைத் தலைவர்கள்.	செயலாளர்கள்
வி. உறுப்பினர்		

மாயவரம் மாநாடு

கட்டணங்கள்

தஞ்சை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல மாநாட்டுக் கட்டணம் இருநாட்களுக்கும் கீழ்க் கண்டவாறு முடிவு செய்யப்பட்டுள்ளது.

(உணவுடன்)

ஆதரவாளர்	ரூ 10-0-0
வரவேற்பாளர்	ரூ 5-0-0
பிரதிநிதி	ரூ 4-8-0
பெண் பிரதிநிதி	ரூ 3-0-0

(உணவின்றி)

பிரதிநிதி	ரூ 2-0-0
பார்வையாளர்	ரூ 1-0-0
பெண் பார்வையாளர்	0-8-0

நாடக நிகழ்ச்சிகளுக்குத் தனிக் கட்டணம் கிடையாது. மாநாட்டு நிகழ்ச்சிகளின், கலைப் பகுதியே அவை.

6-ம் பக்கத் தொடர்ச்சி

பட்டுவிட்டதாகவும் அறிகிறோம்.

நெசவாளர் கோரிக்கை, நியாயம் நிரம்பியது மட்டுமல்ல. இந்த நாட்டில் பிறந்த எந்த மனிதனுக்கும் அளிக்கப்பட வேண்டிய சாதாரண வசதியாகும்.

"வேலைக்கு நூல் கொடு!"—நெசவாளர்கள், சர்க்காரைப் பார்த்து இதுதான் கேட்கிறார்கள்.

ஆனால் நம்ம சர்க்காரோ, அசையவில்லை! இரங்கவில்லை!! தர்பார் நடத்தியும், தடைகளைப் போட்டும், நிலைமையைச் சமாளித்துவிடலாம் என்று இருமாந்து கிடந்தனர்.

மதோன்மத்த நிலையில் கிடந்த மாகாண சர்க்காரை, சேலம் விழிப்புறச் செய்திருக்கிறது.

விழித்த நிலையில், மீண்டும் தூங்கி விடாமல் சென்னை மாநிலத்திலுள்ள எல்லா நெசவாளர்களுக்கும் உடனடிப் பரிகாரமாக பஞ்ச நிவாரணமும், அதே நேரத்தில் அவர்கள் தொழிலுக்குத் தேவையான நூலும் கிடைக்குமாறு செய்தல் வேண்டும்.

மத்திய சர்க்காரை வலியுறுத்தி, மாகாணத்துக்குத் தேவையான நூல் வகைகளைப் பெறும் ஆயத்தத்தில், மாகாண சர்க்கார் முயல வேண்டும்.

வாய்ப் பந்தல், இவ்விஷயத்தில் பலன் தராது. இதைக் கவனத்திலிருத்தி, சர்க்கார் முன்வர வேண்டும். கலங்கி வாழ்விழந்து திண்டாடுவோரின்—கண்ணீர் துடைக்க.

(முன்பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொண்ட பெரியகுளம் மாநாடு, வளர்ந்து வரும் உரிமை வேட்கைக்கோர் எடுத்துக்காட்டு! நாட்டு வாழ்வைச் சீர் குலைக்கும் செயல் எதையும், வாழ்ந்து கெட்ட மரபினர், அனுமதிக்கமாட்டார் என்று எதிரிகளுக்கு-அங்கு அன்று எழும்பிய முழக்கங்கள், எச்சரித்தன.

இத்தகைய மாநாட்டை நடத்திய தோழர்களுக்கும், குறிப்பாக இளமுருகு – பொருட்செல்வி தம்பதிகளுக்கும் நமது வாழ்த்துகள் — நன்றிகள்.

ஒற்றுமை ஓங்குக!
—ஒழிக அநீதி!

விடியற்காலை

[தில்லை—வில்லாளன்]

ஸ்ரீவில்லிபுத்தூரில், பெரியாழ்வார் ஒரு பூக்கடை வியாபாரி. அவர், ரங்கநாதர் ஆலயத்திற்கு, வழக்கமாகப் பூ அனுப்புபவர்—மாதம் முடிந்தால்தான் கணக்கு முடித்துப் பணம் வாங்குவார். அவர், பூ வியாபாரத்திலே பூரிப்படைவார். ஏனெனில் ஒரே கல்லில் இரு கனிகள்—பக்திக்கு, பக்தி! பணத்திற்கு, பணம்!

ஆனால் அவர் மனதிலே ஒரு குறை குடைந்து கொண்டேயிருந்தது. அவரது மனைவியும் இந்தக் குறையைத் தன் கண்ணீரால் கரைத்திடப் பார்த்தாள்.

அவர்கள் கொஞ்சி மகிழ ஒரு குழந்தையில்லை. அதற்காக அவர்கள் ரங்கநாதர் ஆலயத்திற்குச் செய்யாத தொண்டில்லை—படையலில்லை.

எப்பொழுதும் பெரியாழ்வார் தினம் தனது தோட்டத்திற்குச் செல்வார் — மலர் கொய்வார் — தொடுப்பார்—அனுப்புவார்

இடம்:— பெரியாழ்வார் வீடு.

காலம்:— விடியற்காலை.

இருப்போர்:—பெரியாழ்வார், அவர் மனைவி.

[தட தடவெனக் கதவை இடிக்கிறார். அவர் மனைவி வந்து கதவைத் திறந்து விட்டு, திகைத்து நிற்கிறாள் — ஏன்? ஆழ்வார் கையில் ஒரு குழந்தை—அதுவும் அழகான பெண் குழந்தை, ஆகவே ஆச்சர்யத்தால் அசையாத சிலை போல நின்று விடுகிறாள்.]

பெ:- ஐயன் ரங்கநாதன் அளித்த வரப்பிரசாதமடி, இது!

ம:- குழந்தை எங்கே கிடைத்தது?

பெ:- கிடைத்தது, மலர்த் தோட்டத்தில், துளசிச் செடிக் கருகில்!

ம:- எவள் பெற்றுப் போட்டு விட்டு ஓடினளோ — விதவையோ, அல்லது காமக் கள்ளியோ, வேசியோ, தாசியோ......

பெ:- சீ. நமக்கென்று திருமால் தந்த தேவாமிருதத்தைப் பார்த்தும் கண்டபடி உளறுகிறாய்!

[குழந்தையைக் கொடுக்கிறார். அதனை வாங்கிக் கொள்கிறாள் மனைவி]

ம:- தங்க விக்ரகம்போல்!

பெ:- பின், தேவலோகப் பிறப்பு எப்படி இருக்கும்?

ம:- உம், நீங்க வேறே-குழந்தை கிடைத்தது குதூகலந்தான்—ஆனால் அது தேவலோக, இந்திரலோக தந்திரம்னு உளறுறீங்க—என்னதானிருந்தாலும் என் வயிற்றில் பிறக்கவில்லையே......

பெ:- வயிற்றில் பிறந்தால்தானா, —ரங்கநாதர் தந்த இந்த வரம், உன் கையிலிருக்கும் பொழுது! பெண், பேதைதானே, அதனால் தான் பிதற்றுகிறாய்.

[குழந்தை வீறிட்டுக் கத்துகிறது. அவள் உள்ளே செல்கிறாள், அதன் அழுகையை ஓய்வித்தபடியே! பெரியாழ்வார், அந்தக் காட்சியைக் கண்டு மகிழ்கிறார்.]

* * *

அப் பெண்குழந்தையை, மிகவும் அருமையாக வளர்த்து வருகிறார்கள்—இருவருக்கும் அக்குழந்தையென்றாலே உயிர்! பெண்ணின் பெயர் ஆண்டாள்—பெயரிட்டதிலிருந்தே, அவர்கள் எவ்வளவு பிரியம் வைத்திருந்தார்கள் என்பது விளங்கும். ஆனால் தாய் மடிந்துவிட்டாள்.

ஆகவே, இப்பொழுதெல்லாம், ஆண்டாள்தான் மலர்த் தோட்டம் செல்வாள் — மலர் கொய்வது, தொடுப்பது, அனுப்புவதெல்லாம் அவள்தான்! தந்தை பூக்கடையை ரங்கநாதர் கோயிலுக்குச்சென்று மலர்க் காணிக்கை செலுத்திவிட்டுத் திரும்புவார்.

ஆண்டாள், பூத்துக் குலுங்கும் பூங்கொம்பு—பருவத்தின் நுழைவு வாயிலில நின்று கொண்டிருந்தாள்.

விடிவதற்கு முன்னே, தோட்டத்திற்கு அவள் ஓடுகிற அவசரத்தைப் பார்க்கிறபொழுது தந்தை பூரிப்பார்—ஆனால் அதற்குப் பின்னால் இருக்கிற "கதை" அவருக்குத் தெரியாது!

ரங்கநாதன், கோயில் டிரஸ்டியின் குமாரன் — அவன்தான் கோயில் காரியங்களெல்லாம் கவனித்துக் கொள்பவன். அவன் அவ்வழி போவது, வருவதுண்டு—

அவன் பார்வையிலே ஆண்டாள் பட்டதுண்டு—அவள் பார்வையிலே அவனும் அகப்பட்டதுண்டு!

பார்வை—புன்முறுவல்—அர்த்தமற்ற இருமல்—ஆயிரம் அர்த்தம் தரும் வார்த்தைகள் — பேச்சு — பிறகு......? இது பெரியாழ்வாருக்குத் தெரியாது.

நிலைமை இப்படியிருக்க, விடியற்காலையில் ஏன் அவள் மலர்த்தோட்டம் ஓடமாட்டாள்! பனி கொட்டினால் என்ன, குளிர் முற்றுகையிட்டாலென்ன — காதல் சேனைக்கு முன் என் செய்ப முடியும்!

இடம்:- மலர்த் தோட்டம்

காலம்:- விடியற்காலை

இருப்போர்:- ஆண்டாள், ரங்கநாதன்.

ஆ:- காதலா, இப்படி எத்தனை காலம், காலையிலே கண்டு கண்டு மீண்டும் காணமுடியாது ஏங்குவது!

ர:- என் செய்வது, கண்ணே — பொறுத்துக்கொள் - பிறகு நம்மை எவரும் பிரிக்க முடியாத இடத்திற்கே போய்விடுவோம்!

ஆ:- எதைச் சொல்ல வேண்டுமானாலும் இந்நேரந்தானே ஓடிவர வேண்டியிருக்கிறது!

ர:- இல்லை. வழி உண்டு, ஆண்டாள் - மலர் தொடுப்பது நீ, அதில் உன் மனதில் அரும்பும் கருத்துக்களை எழுதிச்சொருகிவிடு — நான் எடுத்துக் கொள்வேன்.

ஆ:- ஆ......காதலா தங்கள் தந்திரம் என்னைப் பரவசத்திலாழ்த்திவிட்டது.

[யாரோ, வரும் காலடியோசை கேட்கிறது. உடனே இருவரும் பிரிகின்றனர்]

ரங்கநாதன் கூறியபடி, தினந் தினம் வித விதமான காதல் கடிதங்களைச் சுமந்தபடி தந்தை செல்வார் ஆலயத்திற்கு! மகளுக்குத் தந்தை தூது—ஆனால், தந்தைக்கு அது தெரியாது. தந்திரக்கார ரங்கநாதன், வரும்மாலைகளில்ஒளிந்திருக்கும் கடிதத்தைத்தினமும் எடுத்து விடுவான்.

தினமும், மாலைகளைக் கட்டி முடித்து, தன் காதலனுக்கு கடிதம் ஏந்திச் செல்லும் மாலையாதலால், தனது தலையில் சூடி மகிழ்வாள்—ஆடுவாள்—பாடுவாள்—தந்தை ஒரு நாள் பார்த்துவிட்டார். சீறினார், "சிறுமதிப் பெண்ணே, செய்யலாமா இப்படி, நீ சூடிக்கொடுத்த மாலை, ரங்கநாதருக்கு ஏற்குமோ?" என்றார்.

மகளோ, பயந்தாள்—"தவறில்லை அப்பா" என்று அர்க்கித்தாள்.

அன்று மாலை போகவில்லை — ஆகவே ரங்கநாதன்வீடு தேடியோடி வந்தான்.

இடம்:— பெரியாழ்வார்வீடு.

காலம்:— மாலை.

இருப்போர்:— பெரியாழ்வார், ஆண்டாள், ரங்கநாதன்.

ரங்:- ஆலயத்திற்கு ஏன் மாலைவரவில்லை?

பெ:- மதிகெட்ட என்பெண்ணால்!

ரங்:- என்ன செய்தாள்?

பெ:- தான் சூடிக்கொடுத்துவிட்டாள். பெண் சூடிய மலரைப் பெருமாளுக்கு எப்படி சாத்துவதுஎன்று தங்கிவிட்டேன்—அபசாரம்,செய்துவிட்டேன்!

ரங்:- (சிரித்தபடியே) அபசாரமில்லை பெரியாழ்வார், விசாரமும் தேவையில்லை—தங்கள் மகள் ஆண்டாள் கன்னிப்பெண் — அவள் குழந்தைமாதிரி — குழந்தையென்றாலே தெய்வம் — தெய்வம் சூடிய மலர்தானே!

பெ:- விசித்திர வியாக்யானம்!

ரங்:- (ஆழ்ந்து சிந்தித்தபடி) இப்படி நான் சொல்லவில்லை—ரங்கநாதர் கூறினார்.

பெ:- திருமால் திருவாய் மலர்ந்தாரா?

ரங்:- நேரில் அல்ல, கனவில் — இல்லாவிட்டால் நான் ஏன் இங்கு ஓடிவருகிறேன்.

பெ:- தன்யனானேன்—என் மகள் பாக்யசாலி!

ரங்:- அதுமட்டுமல்ல, தங்கள் மகளுக்குச்சூடிக்கொடுத்தநாச்சியார் என்று பெயர் சூட்டவும் சொன்னார்

பெ:- ஆகா......பேரானந்தம்..... ஆண்டாள்......ஆண்டாள்.....ஆண்டாள்!

[பெரியாழ்வார் மகளை அழைக்கிறார். அவளோ, கதவிடுக்கிலிருந்தபடி, தன் காதலன் நடிக்கும் நாடகத்தைக்கண்டுரசிக்கிறாள். தந்தை அழைத்தவுடன் வெளியில் வருகிறாள்]

ஆ:- அப்பா...........

பெ:- அம்மா, உனக்கு, லட்சுமிநாராயணனின் கிருபை பூரணமாக இருக்கிறது—காலையிலே தொடுத்த மாலைகளைக்கொண்டுவா.

ஆ:- ஒரு நொடியில்.........

[உள்ளே சென்று பூக்குடலையைக் கொண்டு வந்து தருகிறாள்.]

ரங்:- ஆலயம் செல்லுங்கள் நீங்கள்—ஆசாரசீலரே மாலையணிவிக்க நானும் வருகிறேன்.

[ரங்கநாதன் வெளியேறுகிறான் அவருடன் வேறொரு பாதையிலே திரும்பி, மீண்டும் ஆண்டாளிடம் வருகிறான். அவள் வாசலிலே காத்துக்கிடக்கிறாள் பாம்பின் கால் பாம்பறியும் — அவன் நிச்சயம் வருவான் என்பது அவளுக்குத் தெரியாமலா போய்விடும்!]

ரங்:- எப்படி, கண்ணே, என் நாடகம்?

ஆ:- கேட்கவும் வேண்டுமா?

ரங்:- தெய்வத்தின் பேரைச் சொல்லித்திகைக்கவைத்துவிட்டேன்

ஆ:- இனிமேலும், அதே பக்திப் பாதையிலே தான், நம் காதல்பயணம்!

ரங்:- அதுதான் சங்கடமில்லாதது—சந்தேகமில்லாதது!

ஆ:- உம், தொடங்குவோம் நம் பயணம்.

ரங்:- இனி ஏன் தயக்கம்?

[காதலர் இணைகின்றனர். காதற் கதை பேசிக் கிடக்கின்றனர்.]

ஆ:- அப்பா வரும் நேரமாய்விட்டது!

ரங்:- ஆம், நான் போகிறேன் — விடியற்காலை! மறந்துவிடாதே.

ஆ: வைகறைப் பொழுதைப்பற்றி ஒரு திவ்யபிரபந்தமே பாடுவேனே நான்.

[இருவரும் சிரிக்கின்றனர். பிரிகின்றனர்.]

* * *

தந்தையோ, வைணவ பக்தர் — அவரது ஆசைமகள் ஆண்டாள்.

தந்திரமுறையொன்று சொல்லிக் கொடுத்தான் ரங்கநாதன்.

அதன்படி எப்பொழுதும் "ரங்கநாதா, ரங்கநாதா" என்று பாடுவதும், ஆடுவதுமாகவே இருந்தாள். தந்தையிடமோ, நான் 'ரங்கநாதனை மணந்தால் மணப்பேன்—இன்றேல் இறப்பேன்!" என்று கூறுவாள்.

தந்தை முதலில் மிரண்டார்—பிறகோ, இது பக்தியின் சக்தி—திருமாலையே, திருமணம் செய்துகொள்வதாகத்தன் தெய்வமகள் பேசுகிறாள் என்று எண்ணினார். அதனால் அவருக்கு மட்டிலாத மகிழ்ச்சிமட்டுமல்ல — தனக்கு வைகுந்தவாசல் திறந்துவிட வந்த பெருந்தேவி இவள் என்று எண்ணிக் கிடந்தார்.

அவளோ, திவ்யப் பிரபந்தம் பட ஆரம்பித்துவிட்டாள்.

பக்திப் பித்தம் என்று அவரோ தீர்மானித்துக் கொண்டு சோதிருந்துவிட்டார்.

நடுங்கும் குளிரில் அவள் மலர்த் தோட்டத்திற்கு ஓடுவாள்—தந்தை எதும் பேசமாட்டார். தடுக்கவும் மாட்டார். ஏன்? அவளுக்குத்தான் திருமாலின் கிருபை ஏற்கனவே கிடைத்துவிட்டதே!

பொழுது விடிவதற்கு முன்னாலே தோட்டத்திற்கு ஓடுவாள்—அங்கு மல்லிகைப் புதரில் மறைந்திருக்கும் ரங்கநாதன் வெளியில் வருவான் — கொஞ்சி மகிழ்வர்—பொழுது விடிவதற்குள் காதலன் மறைந்து விடுவான்

பிறகு ஆண்டாள் மலர் கொய்வாள்.

பக்திப் பித்தம் வளர, வளர, ஊரார் வம்புபேச ஆரம்பித்து விட்டனர்.

வயது வந்த பெண் — கண்டபடி திரிகிறாள்.

பக்தியாம் — பக்தி — அவளுக்கு ஆண் மயக்கம்—ஆகவேதான் ஆண்டவன் பெயரைச் சொல்லி அலைகிறாள்.

காலையிலே ஓடுகிறாள் — எந்தக் காலியோ, அவளைப பைத்தியமாக்கி விட்டான்.

ஆண்டாள் — பருவம் பாழான மலர்

பக்தி திரை — திரை மறைவில் நடப்பது விகாரம்!

மலர்த் தோட்டத்திற்கு அவள் போகவில்லை—ஏதோ ஒரு மன்மத மாளிகைக்குப் போகிறாள்.

இப்படி ஊரிலே பேசிக்கொண்டனர்.

இந்த அரிய சந்தர்ப்பத்தை, தந்திரமாகப் பயன்படுத்திக் கொண்டான் ரங்கநாதன்.

இடம்:- கோயில்.
காலம்:- இரவு
இருப்போர்:- பெரியாழ்வார், ரங்கநாதன்.

ர:- பெரியாழ்வாரே, ஏன் உங்கள் முகத்திலே ஏக்கம வழிகிறது?

பெ:- பெண்ணைப் பெற்றவர்களுக்கெல்லாம், இது பரம்பரை சாபம போலும்!

ர:- என்ன......நீங்கள் கூறுவது, புரியவில்லையே!

பெ:- என் மகள் ஆண்டாள்— சூடிக்கொடுத்த நாச்சியாளை—இந்த ஊர் தூற்றுகிறது!

ர:- பெருமாள் போற்றும் பெருமாட்டி, பித்தர்கள் தூற்றலை ஏன் பொருட்படுத்த வேண்டும்?

பெ:- இருந்தாலும், அவள்வயது வந்த பெண்— வயதுப்பேச்சு எழுவதிலும் தவறில்லையே!

ர:- அப்படியானால் மணம் முடித்துத் தருவதுதானே?

பெ:- யாருக்கு......?

ர:- ஏன்? மணமகன் கிடைக்கமாட்டான் என்ற சந்தேகமா?

பெ:- இல்லையப்பா, அவள் அழகுக்கும், அறிவிற்கும் போட்டி போட்டுக் கொண்டு வருவார் ஆனாலும்......

ர:- ஆனாலும்......என்று ஏன் நிறுத்துகிறீர்கள்? கூற வேண்டியதைக் கூறிவிடுங்கள்.

பெ:- அவள்தான், ரங்கநாதரைத் தவிர வேறு யாரையும் மணக்க முடியாது என்கிறாளே!

ர:- (உள்ளுக்குள் சிரித்தபடி) ஆச்சர்யம், ஆச்சர்யம்! இந்தக் காலத்திலும், இத்தகைய தெய்வீகத் திருவிளையாடல்? ஆண்டவனை எப்படி மணப்பது?

பெ:- இந்தக் கேள்வியை நான் பலமுறை கேட்டுக்கேட்டு அலுத்து விட்டேன்!

ர:- (யோசிப்பது போல) ஒரு வேளை, இப்படிச் செய்தால்......

பெ:- (அவசரத்துடன்) எப்படி?

ர:- ஆண்டாள், ஆண்டவனை மணக்க விரும்புகிறாள் - மனைவி என்றாலே, கணவனுக்குத் தொண்டு செய்பவள்தானே — ஏன், நீங்கள் உங்கள் மகளை, ஆண்டவன் தொண்டிலே ஈடுபடுத்தலாமே!

பெ:- அதுவும் சரிதான்......
[பெரியாழ்வார் சிந்தித்தபடி நடக்கிறார். ரங்கநாதன் சிரித்தபடியே போகிறான்.]

* * *

மார்கழி மாதம் நல்ல குளிர்— எப்பொழுதும் ஆண்டாளுக்கு 'விடியற்காலை பயணம்' நிற்கவில்லை.

நாட்பொழுதும், கடுங் குளிரில் எழுந்து ஓடுவாள் — பாடுவாள்.

முன்பெல்லாம் தனியாக ஓடுவாள். இப்பொழுதோ தோழிமார்களையும் உடன் அழைத்துக்கொண்டு போய் வரத் தொடங்கினாள்.

கடவுள்மார்கள் ஆடிய 'காதல் சீன்கள்' மட்டும அவளுக்கு மனப்பாடம் ஆகவே அவைகளையெல்லாம் தினமும் 'ஒத்திகை' பார்ப்பது தான், அவளுக்கு வேலை—இதற்கு தந்தை வைத்த பெயர் பக்திப்பித்தம்—ஊரார் கூறியதோ, பருவக் கொழுப்பம் — ரங்கநாதனோ விடியற் காலை விருந்து என்று பூரித்துக் கிடந்தான்

ஆண்டாளோ, தன் காதலன் கற்பித்தபடி, பக்திப் பித்த வேடத்தை, கொஞ்சமும் சந்தேகிக்க முடியாத வகையில் நடித்துக் காண்பித்தாள்.

இப்படி மகளிருக்க, தந்தை யோசித்தார் — மேலும், மேலும் யோசித்தார்!!

கடைசியில் ஒரு முடிவிற்கு வந்தார்—அந்த முடிவின்படி நடக்கவும் சித்தமானார்.

தன் மகளை அழைத்தார்—பேசினார்.

இடம்:- பெரியாழ்வார் வீடு
காலம்:- பகல்.
இருப்போர்:- ஆண்டாள், தோழிமார், பெரியாழ்வார்.

பெ:- அம்மா, பகலில் இந்த வெயிலில்கூட ஆட்டமும், பாட்டமும்—எனக்குச் கொஞ்சமும் பிடிக்கவில்லை!

ஆ:- அப்பா, ஆட்டம் உங்களுக்காக அல்ல —என் காதலர் ரங்கநாதருக்காக!

பெ:- (தோழிமார்களைப்பார்த்து) நீங்களெல்லாம், உங்கள் இல்லங்களுக்குச் செல்லுங்கள்.

[பெண்கள் எல்லோரும் வெளியேறுகின்றனர்]

பெ:- மகளே, உன்னை இத்தனை ஆண்டுகள் வளர்த்த தந்தை கேட்கிறேன் — மனதில் உள்ளதை ஒளிக்காமல் சொல்லவேண்டும்.

ஆ:- இதுவரை நான் எதையும் ஒளித்ததில்லையே அப்பா.

பெ:- இல்லையம்மா, நீ பருவம வந்த பாவை—யாரையாவது மணந்து தானாகவேண்டும்.

ஆ:- ஓ.........ரங்கநாதரை!

பெ:- இதென்ன விளையாட்டு — மனிதப்பெண் தெய்வத்தைமணக்க வேண்டும் என்கிறாய் — முடியுமா?

ஆ:- முடியாவிட்டால், கன்னியாகவே இருந்து, அவர் புகழ்பாடிபாடி மகிழ்வேன் அப்பா,

பெ:- அப்படியானால் ஆலயத் திருப்பணி செய்யப் போகிறாயா அம்மா.

ஆ:- என்பாக்கியம்-இப்பொழுது இங்கிருந்தபடி அதைச்செய்கிறேன், இனி வேண்டுமானால், அங்கிருந்து கொண்டு அந்த அறப்பணி செய்ய எனக்கு தடையில்லையப்பா!

[பெரியாழ்வார் கண்களில் நீர் வடிகிறது—ஆண்டாள் முகத்திலோ ஆனந்தம்! அதனைப் பார்த்துத் தன் கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறார்.]

* * *

தன் திட்டப்படி தன்மகளை ரங்கநாதர் ஆலய அறத்தொண்டு செய்ய அனுப்ப சகல ஏற்பாடுகளும் செய்தார்.

மேளவாத்தியங்கள் முழங்க, ஊரார் பலர் உடன்வர, பக்தர்களின் பாடல்கள் ஒலிக்க, பல்லக்கில் தன் மகளைப் பவனிவரச்செய்து அழைத்துச்சென்றார்.

இந்த வைபவத்தை வெற்றிகர

(5-ம் பக்கம் பார்க்க)



Edited Printed & Published by C. N. Annadurai M. A. at DravidaNadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram'